# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

---

(1998, ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**1998, ஏப்பிறல் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.00 தபாற் செலவு : ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 5/98

**1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1998 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1998, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

2. 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "காப்புறுதி அல்லது வங்கித்தொழில் அல்லது நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "காப்புறுதி அல்லது வங்கித்தொழில் அல்லது நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஈ) தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

2-ല 047344-1,225 (98/03)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.